**செ.வெ.எண்:68** **நாள்:21.9.2025**

**சிவகங்கை மாவட்டம்**

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்பட்டு வரும்**
**மாவட்ட மகளிர் அதிகார மையத்தில் (DHEW)**
**காலிப்பணியிடமாகவுள்ள நிதி எழுத்தறிவு நிபுணர் (Specialist In Financial Literacy)**
**மற்றும் பாலின நிபுணர் (Gender Specialist) பணியிடங்களுக்கு,**
**வருகின்ற 26.9.2025 ஆம் தேதிக்குள் குறிப்பிட்ட முகவரியில் விண்ணப்பிக்கலாம் -**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

*********

சிவகங்கை மாவட்டத்தில் ஒன்றிய அரசின் திட்டங்கள் திறன்பட செயல்படுத்தப்படுவதையும், திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு பயன்பாட்டு சான்று அடிப்படையில் கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்திடவும், பயனாளிகள் மற்றும் திட்டப்பலன்களை கண்காணிக்கவும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் கடந்த நவம்பர் 2023 முதல் மாவட்ட மகளிர் அதிகார மையம் (DHEW) செயல்பட்டு வருகிறது.

இம்மையத்தில், காலிப்பணியிடமாக உள்ள ஒன்று (1) நிதி எழுத்தறிவு நிபுணர் (Specialist In Financial Literacy) பணியிடத்திற்கும், இரண்டு (2) பாலின நிபுணர் (Gender Specialist) பணியிடங்களுக்கும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதில், நிதி எழுத்தறிவு நிபுணர் (Specialist In Financial Literacy) பணியிடத்திற்கு விண்ணப்பதாரர் பொருளாதாரம் / வங்கியியல் போன்ற பிற துறைகளில் பட்டம் (Graduate In Economics / Banking Other Similar Disciplines, Post Graduates Will Be Preferred) பெற்றிருத்தல் வேண்டும். முதுகலை பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மாத தொகுப்பூதியமாக ரூ. 21,000/- வழங்கப்படும்.

நிதி எழுத்தறிவு / நிதி உள்ளடக்கம் சார்ந்த அரசு / அரசு சாரா அமைப்புடன் (Atleast 3 Years Experience Of Working With The Government / Non Government Organization In Financial Literacy / Financial Inclusion Focussed Themes) குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

பாலின நிபுணர் (Gender Specialist) பணியிடத்திற்கு விண்ணப்பதாரர் சமூகப் பணி / பிற சமூக ஒழுக்கங்களில் (Graduate In Social Work / Other Social Disciplines, Post- Graduates Will Be Preferred) பட்டம் பெற்றிருத்தல் வேண்டும், முதுகலை பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மாத தொகுப்பூதியமாக ரூ.21,000/- வழங்கப்படும். பாலினத்தை மையமாகக் கொண்ட அரசு / அரசு சாரா அமைப்புடன் (Atleast 3 Years Experience Of Working With The Government / Non Government Organization In Gender Focussed Themes). குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

எனவே, ஆர்வமுள்ள தகுதியான நபர்கள் தங்களது சுயவிபரங்களை வருகின்ற 26.9.2025 ஆம் தேதி மாலை 5.45 மணிக்குள் தரை தளம், மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், சிவகங்கை முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கப்பெறும் வகையில் அனுப்பி வைத்திடல் வேண்டும். கூடுதல் விபரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக தரை தளத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட சமூகநல அலுவலகத்தை நேரில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சிவகங்கை.**